<u>செ.வெ.எண்.168</u> நாள் <u>14.03.2013</u>

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2004–ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சுனாமியின்போது, மக்களின் துயர்துடைக்க உதவித் தொகை, வீடு இழந்தவர்களுக்கு வீடுகள் கட்டுதல், வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு, அவர்களின் மீன்பிடித் தொழிலை தொடங்குவதற்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்குதல் போன்ற எண்ணற்ற நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புது வாழ்வினை அளித்தார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு, வீடு இழந்த மக்களுக்கு அரசு மட்டுமின்றி, அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இதில் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நாகப்பட்டினம், கடலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளில் கூரைத்தள ஓடுகள் பதிக்கப்படாததால், மேல் கூரையில் நீர்கசிவு ஏற்பட்டு, அதில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வீடுகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்டிருந்தாலும், அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அந்த வீடுகளின் கான்கீரிட் கூரைகளின் மீது சுருக்கியுடன் கூடிய கூரைத் தள ஓடுகள் பதித்து, நீர் கசிவினை தடுப்பதற்காக 19.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, நாகப்பட்டினம் மாவட்ட ஊரகப் பகுதிகளில் 7,513 வீடுகளுக்கு, 12.02 கோடியும், கடலூர் மாவட்ட ஊரகப் பகுதிகளில் 1,203 வீடுகளுக்கு, 1.92 கோடியும், தூத்துக்குடி மாவட்ட ஊரகப் பகுதிகளில் 233 வீடுகளுக்கு, 37 லட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்ட ஊரகப் பகுதிகளில் 2,518 வீடுகளுக்கு, 4 கோடியே 3 லட்சம் ரூபாயும், திருநெல்வேலி மாவட்ட ஊரகப் பகுதிகளில் 568 வீடுகளுக்கு, 91 லட்சம் ரூபாயும், என மொத்தம் 19.25 கோடி ரூபாய் செலவில், இந்த 5 மாவட்டங்களில் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட 12,035 வீடுகளைப் பழுது பார்க்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர்,செய்தி-மக்கள் தொடர்புத்துறை,சென்னை-9.
நாள்:- 14.3.2013.